## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 434/2016</u>

நாள் 17.09.2025

DW1 – கருப்புசாமி

த/பெ – முதலி கருப்பன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of September 2025)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது பூர்வீகம் கந்தம்பாளையம் ஆகும். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் தாவா சொத்தில் வசித்து வந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் ஒரு சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன், அந்த கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். எனது அண்ணன் முத்துச்சாமி 1972-ம் ஆண்டிற்கு முன்பு கந்தம்பாளையத்தில் குடியிருந்து வந்தார் என்றும், அதற்கு பின்பு வெல்ஸ்புரத்தில் தான் அவர் இறக்கும் காலம் வரையில் குடியிருந்து வந்தார் என்றால் இல்லை. எனது அப்பாவும், எனது அண்ணனும் பூர்வீக சொத்திலிருந்து சம்பாதித்து வந்த பணத்தை கொண்டு தான் தாவா சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. 1972-க்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கு கந்தம்பாளையத்தில் சுமார் 15 ஏக்கர் நிலம் இருந்தது என்றால் அது எனது அப்பா கிரையம் வாங்கிய சொத்துக்கள் ஆகும். அதில் 6.68 ஏக்கர் சொத்தை எனது அப்பாவே விற்று விட்டார். அதில் வீட்டுமனைகள் உள்ளது. அந்த சொத்துக்களை எனது அப்பா கூட்டுக்குடும்ப சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் இல்லை.

2. எனது அப்பா முதலை கருப்பன், எனது அம்மா அம்மாசியம்மாள் (எ) நாகம்மாள் ஆகிய இருவரும் கந்தம்பாளையத்தில் வைத்து தான் இறந்து போனார்கள். எனது அண்ணன் முத்துச்சாமியின் மகளான மல்லிகாவும் கந்தம்பாளையத்தில் வைத்து தான் இறந்து போனார் என்றால் சரியல்ல. எனது அப்பாவையும், எனது அம்மாவையும் எனது அண்ணன் மகளான மல்லிகாதான் கடைசி காலம் வரையில் பராமரித்து வந்தார் என்றால் இல்லை. எனது தாயார் அம்மாசியம்மாள் (எ) நாகம்மாள் அவர் இறப்பதற்கு முன்பு 7,8 ஆண்டுகளாக புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்து வந்து தான் இறந்து போனார் என்று சொன்னால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும் எனது தாயார் அம்மாசியம்மாள் (எ) நாகம்மாள் அவர் இறப்பதற்கு முன்பு 7,8 ஆண்டுகளாக புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்து வந்து தான் இறந்து போனார் என்றும் நான் இந்த வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா 90 வயதில் இறந்து போனார். எனது அப்பாவிற்கு பக்கவாதம் வந்து படுத்த படுக்கையாக இருந்து தான் இறந்து போனார் என்றால் இல்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.11 உயில் சாசனத்தை எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் அவிநாசி தாலுகா ஆபிஸ் பக்கம் உள்ள நாயக்கர் தோட்டத்தில் வைத்து எழுதப்பட்டது. அந்த உயில் சாசனத்தை ராமசாமி என்பவர் எழுதினார். உயில் சாசனம் எழுத விபரத்தை எனது அம்மா தான் சொன்னார். அப்போது நானும் உடனிருந்தேன் என்றால் சரிதான். கடந்த 18.09.2006–ம் தேதியில் முத்திரைத்தாள் பத்திரம் வாங்க நானும், எனது அம்மாவும், எனது அப்பாவும் மற்றும் போத்தம்பாளையத்தை சேர்ந்த ராமசாமி, எங்கள் ஊரான கந்தம்பாளையத்தை சேர்ந்த சிவசாமி ஆகியோர் சென்றோம். அப்போது எனது அம்மா பெயரில் ரூ.10/– மதிப்பு

கொண்ட 5 முத்திரைத்தாள்களை வாங்கினோம், எனது பெயரில் ரூ.20/– மதிப்பு கொண்ட 6 முத்திரைத்தாளை வாங்கினேன். மறுநாள் 19.09.2006–ம் தேதி காலை 8.30 மணிக்கு ராமசாமி அலுவலகத்திற்கு வந்து விட்டோம். அன்றைய தினம் உயில் சாசனத்தை தவிர ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தையும் எழுதினோம். செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு எனது பெயரில் தான் பத்திரம் வாங்கப்பட்டது. உயில் சாசனத்தை அன்றைய தினம் காலை சுமார் 9.00 மணிக்கு எழுதி முடிக்கப்பட்டு விட்டது அதற்கு பின்பு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் 12.00 மணிக்குள் பத்திரத்தை கொடுத்து பதிவு செய்து விட்டோம். செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுத எனது அப்பா தான் விபரத்தை சொன்னார். உயில் சாசனத்தில் போத்தம்பாளையம் ராமசாமி, பெரியாயிபாளையம் முருகேசன் ஆகிய இருவரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். சாட்சிகள் இருவரையும் எனது அப்பா தான் தகவல் கொடுத்து வரச்சொல்லியிருந்தார். சாட்சி ராமசாமி எனது அப்பாவிற்கு மருமகன் ஆவார். சாட்சி முருகேசன் எனது அப்பாவுடன் தட்டு வியாபாரம் செய்து வந்தவர் ஆவார். அந்த சமயத்தில் சாட்சி ராமசாமிக்கு சுமார் 50 முதல் 55 வயது இருந்திருக்கும், சாட்சி முருகேசனுக்கு சுமார் 75 வயதிற்கு மேல் இருந்திருக்கும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.12 தானசெட்டில்மெணட் பத்திரத்தில் கைரேகைக்கு பக்கம் உள்ள முதலை கருப்பன் என்ற பெயரை யார் எழுதினார் என்றால் ஆவண எழுத்தர் ராமசாமி தான் எழுதினார். அதனால் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தையும், எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தையும் நான் எழுதி வாங்கி விட்டேன் என்றால் சரியல்ல, எனது அம்மா உயில் சாசனத்தையும், எனது அப்பா

செட்டில்மெண்ட் ஆவணத்தையும் எனது பெயருக்கு எழுதி வைத்தார்கள். அந்த சமயத்தில் எனது அண்ணன் பிள்ளைகள் இருப்பது சம்பந்தமாக எனது பெற்றோரிடம் சொன்னேனா? என்றால் சொல்லவில்லை.

4. மேற்படி பி.வா.சா.ஆ.11 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவணங்களை இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் சொத்தை அபகரிக்க வேண்டி தான் நான் எனது அப்பாவையும், எனது அம்மாவையும் அழைத்து சென்று மோசடியாக உயில் சாசனத்தையும், செட்டில்மெண்ட் ஆவணத்தையும் தாயர் செய்து கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் அந்த உயில் சாசனம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

5. தாவா சி–செட்டியூல் சொத்தைப் பொறுத்து எனது அப்பா எழுதி வைத்த பி.வா.சா.ஆ.13 செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து 03.02.2007–ம் தேதியில் பத்திரத்தை என்னிடம் எனது அப்பா கொடுத்த போது தான் தெரிய வந்தது. இந்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய போது நான் எனது அப்பாவுடன் செல்லவில்லை. நான் சொல்வது போல பி.வா.சா.ஆ.13 செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது அப்பா எழுதி வைக்கவில்லை என்றும், அது என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.14 முதல் பி.வா.சா.ஆ.24 வரையிலான கந்தாய வரி ரசீதுகள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.25 மற்றும் பி.வா.சா.ஆ.26 ல் கண்ட அ.வ.எண்.164/1998 வழக்கில் கண்ட சர்வே எண்.152/2, 144/2 காலைகளின் மொத்த விஸ்தீரணம் 2.47 ஏக்கர்

என்றால் சரிதான். அந்த இரண்டு சொத்துக்களின் சர்வே எண்.152/2 என்ற சொத்து பூர்வீக சொத்து என்றால் எனது தாத்தா பாட்டாவலையன் 1948–ம் ஆண்டில் கிரையம் வாங்கிய சொத்து. அந்த சொத்தை சிந்த கருப்பனுக்கு 31.01.1974–ம் தேதியில் கிரையம் கொடுத்து விட்டார். அவரிடமிருந்து நான் 20.09.1996–ம் தேதியில் நான் கிரையம் பெற்றேன். நான் பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை கொண்டும், தாவா சி–செட்டியூல் சொத்தில் வந்த வருமானத்தை கொண்டும் தான் கிரையம் பெற்றேன் என்றால் இல்லை. நான் தனியாக வாங்கிய சொத்து ஆகும். எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றும், கூட்டுக்குடும்ப சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த அ.வ.எண்.164/1998 வழக்கில் இந்த வழக்கின் வாதிகளை தரப்பினர்களாக கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். உண்மை விபரம் தெரிந்து விடும் என்பதற்காக தான் நான் வாதிகளை அந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

7. அதேபோல், நான் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது அ.வ.எண்.11/2012 என்ற வழக்கை பிரான்சிஸ் மற்றும் 29 நபர்கள் மீது தாக்கல் செய்ததேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சொத்துக்கள் எனக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியிருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இந்த வழக்கின் வாதிகளை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தான் பி.வா.சா.ஆ.27 மற்றும் பி.வா.சா.ஆ.28 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் கண்ட சொத்தும் எங்கள் கூட்டுக்குடும்ப சொத்து என்றும் சொன்னால் சரியல்ல.

8. தாவா சி–செட்டியூல் சொத்து சம்பந்தமாக அ.வ.எண்.291/2004 என்ற வழக்கை எனது அப்பா மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே எனது அப்பா இறந்து போய்விட்டதால் எனது அப்பா எனது பெயருக்கு எழுதி வைத்து செட்டில்மெண்ட் ஆவணத்தின் பேரில் நான் அந்த வழக்கை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இந்த வழக்கின் வாதிகளை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தில் இந்த வழக்கின் வாதிகளுக்கும் பாத்தியம் உள்ளது என்பதை நன்கு தெரிந்திருந்தும் நான் அவர்களை அந்த வழக்கில் வேண்டுமென்றே கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தான் பி.வா.சா.ஆ.30 மற்றும் பி.வா.சா.ஆ.31 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

9. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் விபரத்தை நன்கு தெரிந்திருந்தும் நான் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 21.07.2011–ம் தேதியில் பரமசிவம் வகையறாவிற்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால், எனது பெயருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் பேரில் தான் கிரையம் கொடுத்தேன். அந்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ.34, பி.வா.சா.ஆ 35, பி.வா.சா.ஆ 36 ஆவணங்களில் கண்ட பட்டா சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்தில் வாதிகளுக்கும், 5,6 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து சட்டப்படி 1/3 பங்கு பாக பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் எனது அக்கா அருக்காணியம்மாளுக்கு பொதுவில் 1/3 பங்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. அதனால்

எனது அப்பா மற்றும் எனது அம்மா எழுதி வைத்ததாக சொல்லப்படும் பி.வா.சா.ஆ.11 உயில் சாசனம் மற்றும் பி.வா.சா.ஆ.12, மற்றும் பி.வா.சா.ஆ.13 செட்டில்மெண்ட் ஆவணங்களின் பேரில் நான் தாவா சொத்தில் தனித்த பாத்திய உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் எங்கள் குடும்பத்தின் பூர்வீக மற்றும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் அந்த சொத்துக்களைப் பொறுத்து யாரும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த முன் வழக்குகளான அ.வ.எண்.64/1998, அ.வ.எண்.11/2012, அ.வ.எண்.291/2004 வழக்குகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் தான் 1983–ம் வருடம் காரமடை கூட்டுறவு சொசைட்டியில் எல்லோரும் சேர்ந்து அடமான கடன் பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.17 15:14:45 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**